சார்வரி ௵ ஆடி ௴
ஜூலை - ஆகஸ்ட் 2020

ஸ்ரீ:

மலர்: 3
இதழ்: 4

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:


# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com




நாதமுனிகள் திருநக்ஷத்ரம்

சார்வரி ஹு ஆடி மீ
ஜூலை - ஆகஸ்ட் 2020

மலர்: 3
இதழ்: 4

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

6.30 - விச்வரூபம்
8.30 - திருவாராதனம்
9.45 - சாற்றுமுறை

**வியாழன் முதல் சனி வரை**

6.00 - விச்வரூபம்
7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் | ஸ்ரீ R. ராகவன் | ஸ்ரீ அழிசூர் R. ராகவன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sudhakar Thirumalai
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

சென்ற ஆண்டு ஆடி மாத மலரில் விண்ணப்பிக்கும்போது, இது ஒரு ‘தள்ளுபடி விற்பனை’ மாதம், எனக் குறிப்பிட்டோம். இவ்வாண்டும் அதே மாதம்தான் என்றாலும், விற்பனை இல்லை; ஆகத் தள்ளுபடியும் இல்லை.

ஆனால், சில வாக்குகள் பொய்ப்பதில்லை. இவ்வாண்டும் ‘தள்ளுபடி’ உண்டு – அதாவது Lockdown, வீட்டுக்குள்ளேயே தள்ளிவைத்தல் / எம்பெருமானின் ஸேவையிலிருந்து தள்ளிவைத்தல் ஆகியவை. இந்தப் ‘படி’யும் அவனுடைய ஸங்கல்ப விசேஷமே.

ஸ்ரீபாகவதத்தில் எம்பெருமானின் ஒரு வசநம் – ‘‘தேந து:க்கேன ஸந்தப்த: யதி மாம் ந பரித்யஜேத் | தம் ப்ரஸாதம் கரிஷ்யாமி யஸ்ஸுரை: அபி துர்லப: [நான் துன்புறுத்திய போதிலும் என்னை விடாதிருந்தானாகில், அவனுக்கு தேவர்களும் பெற முடியாத அநுக்ரஹத்தைச் செய்வேன்]’’ என. ஆசார்ய ஸார்வபௌமன் அநுக்ரஹத்தால், எம்பெருமானின் வாக்கில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ள நமக்கு, வெகு சீக்கிரமே இந்தத் ‘தள்ளுபடி’யிலிருந்து விமோசனம் பிறக்கவேணும்’ என ப்ரார்த்திப்போமாக! பக்தி-யோகம் செய்பவனுக்கு பலன் தாமதித்தாலும், யோக-அநுபவமே ரஸமாக இருக்குமல்லவா ! அந்நிலைதான் நமக்கு.

இந்த நம்பிக்கையின் ஒரு ப்ரதிபலிப்பு தான், இத்தனை இடையூறுகளுக்கு நடுவிலும் தவறாமல் தொடர்ந்து ‘தேசிக ஸந்தேசம்’ வெளிவருவது. ஏட்டு-ப்ரதியாகவே (விஷய) பாவத்தில் குறையின்றி பாகவதர்கள் உகப்புக்காக ‘ஸந்தேசத்தைத்’ தொடரும் தூப்புல் வள்ளலுக்கு, நாம் கைம்மாறு காணகில்லோம்.

இம்மாத மலரில் நாம் அநுபவிக்க அமைந்துள்ள ஒளிப்படங்கள், கோடை உத்ஸவம் (7 நாட்கள்) மற்றும் நாதமுனிகள் திருநக்ஷத்ரம் இவற்றிலிருந்து...

மேலும் சிறப்புக் கட்டுரைகளுடன், இந்த இதழிலிருந்து, சிறுவர்களுக்கான தொடர் ‘ஸ்ரீநிவாஸனின் கருணை’ தொடங்குகின்றது. அது என்றென்றும் தொடர்ந்து, உலகில் துன்பங்களைத் தொலைத்து, க்ஷேமத்தை நல்க வேண்டும் என்று ப்ரார்த்திப்போமாக!

ஸ்ரீ:

# Keeping Our Fingers Crossed

FROM THE DESK OF TRUSTEES

The COVID-19 pandemic is still vigorous and threatening the entire world, and has led to loss of lakhs of people the world over.

As for Tamil Nadu, we saw hordes of people from Chennai returning to their native districts and, consequently, there has been a drastic increase in the number of cases. This may lead to extension of the lockdown, which indeed is a worrying thought.

However, it is good to see the opening of smaller temples for public Darsan in the rural areas. Hopefully, larger temples in major districts, including Chennai and the surrounding districts, are made accessible to the public sooner than later and we continue to pray the Divya Dhampathis and our Acharya Swami Desikan.

Once the lockdown is withdrawn and/or the government clears the deck as regards public Darsan, the same will be notified.

In spite of the total lockdown, the daily Pujas in our temple are being performed diligently with minimum Kainkaryaparas. Besides, the seven-day Kodai Uthsavam, Sudarsana Jayanthi, Periyazhwar Satrumurai and Nathamunigal Saatrumurai were conducted in the best possible manner within the temple premises, without procession.

In view of the possibility of further extension of the lockdown for another month or so, the dates for the Annual Brahmothsavam, which normally would have been conducted in the month of Vaikasi (May-June) in our Temple, has not been finalised yet.

Considering the present crisis, the Devasthanam has offered an additional salary of ₹5,000/- each to all the Kainkaryaparas for four consecutive months. We wish to record that a few philanthropists have also provided monetary assistance to them during this period, which the Trust Board has acknowledged with thanks.

We take this opportunity to again thank the Archakas and the other staff members for their fullest co-operation and dedication.

We appreciate the understanding shown and cooperation extended by the Sevarthis, Ubhayadharas, donors and the associations affiliated to the Temple, which have helped us in tiding over the continuing challenge. ✻

ஸ்ரீ:

# சார்வரி வருட ஆடி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை / ஆகஸ்ட் | ஆடி | | | | | |
| 16.7.20 | 1 | ஏகாதசி | வியாழன் | கார்த்திகை | தக்ஷிணாயன புண்யகாலம் – திருவாடிப்பூரம் – 2ம் நாள் – காலை – பெருமாள், தாயார் மூலவர், ஆண்டாள், தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம், மாலை ஆண்டாள் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ S. ராமஸ்வாமி – ஸ்ரீ S. பார்த்தஸாரதி. ஆண்டாள் உத்ஸவம் – ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன் |
| 17.7.20 | 2 | த்வாதசி | வெள்ளி | ரோஹிணி | திருவாடிப்பூரம் – 3ம் நாள் – காலை – தாயார், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை ஆண்டாள் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | தாயார் – ஸ்ரீ ராகவன், C/o. ஸ்ரீ K. ரவி. ஆண்டாள் – ஸ்ரீ N. சேஷாத்ரி |
| 18.7.20 | 3 | த்ரயோதசி | சனி | ம்ருகசீர்ஷம் | திருவாடிப்பூர உத்ஸவம் – 4ம் நாள் – காலை ஆண்டாள் திருமஞ்சனம் – மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ P.R. ஸ்ரீநிவாசன் |
| 19.7.20 | 4 | சதுர்தசி | ஞாயிறு | திருவாதிரை | திருவாடிப்பூர உத்ஸவம் – 5ம் நாள் – காலை ஆண்டாள் திருமஞ்சனம் – மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ C.R. ராகவன் |
| 20.7.20 | 5 | அமாவாசை | திங்கள் | புநர்வஸு | திருவாடிப்பூர உத்ஸவம் – 6ம் நாள் – காலை பெருமாள், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை ஆண்டாள் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | அமாவசை – ஸ்ரீ கோவிந்தன், ஆண்டாள் – ஸ்ரீ V.C. ஸ்ரீபதி |
| 21.7.20 | 6 | ப்ரதமை | செவ்வாய் | புஷ்யம் | திருவாடிப்பூர உத்ஸவம் – 7ம் நாள் – காலை ஆண்டாள் திருமஞ்சனம் – மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ T.R. தேவநாதாச்சர் |
| 22.7.20 | 7 | த்விதீயை | புதன் | ஆயில்யம் | திருவாடிப்பூர உத்ஸவம் – 8ம் நாள் – காலை ஆண்டாள் திருமஞ்சனம் – மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ வேங்கட நரசிம்ஹன் |
| 23.7.20 | 8 | த்ருதீயை | வியாழன் | மகம் | திருவாடிப்பூர உத்ஸவம் – 9ம் நாள் – காலை ஆண்டாள் திருமஞ்சனம் – மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன். |
| 24.7.20 | 9 | சதுர்த்தி | வெள்ளி | பூரம் | திருவாடிப்பூர உத்ஸவம் – காலை பெருமாள், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை திருக்கல்யாண உத்ஸவம், ஸேவாகாலம், சாற்றுமுறை, சேர்த்தி ஸேவை | ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25.7.20 | 10 | பஞ்சமி | சனி | உத்தரம் | ஊர்கோல உத்ஸவம் – மாலை பெருமாள், ஆண்டாள் ஆஸ்தானம் | ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |
| 26.7.20 | 11 | ஷஷ்டி | ஞாயிறு | ஹஸ்தம் | ஜ்யேஷ்டாபிஷேகம் – பெருமாள், தாயார், மூலவர், உத்ஸவர் – 81 கலச திருமஞ்சனம் – கருட பஞ்சமி – கருடன் திருமஞ்சனம் | ஸ்ரீ R.கோபால ஸ்வாமி ஐயங்கார் பண்ட் – ஸ்ரீ ஆனந்த் ரங்காச்சாரி |
| 27.7.20 | 12 | ஸப்தமி | திங்கள் | சித்திரை | மதுரகவிகள் | |
| 28.7.20 | 13 | அஷ்டமி / நவமி | செவ்வாய் | ஸ்வாதி | பெரியாழ்வார் | |
| 29.7.20 | 14 | தசமி | புதன் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 30.7.20 | 15 | ஏகாதசி | வியாழன் | அநுஷம் | நாதமுனிகள் | |
| 31.7.20 | 16 | த்வாதசி | வெள்ளி | கேட்டை | தாயார் | ஸ்ரீ S. ஸுந்தரம் |
| 1.8.20 | 17 | த்ரயோதசி | சனி | மூலம் | திருமால்வடை | |
| 2.8.20 | 18 | சதுர்தசி | ஞாயிறு | பூராடம் / உத்தராடம் | ஆளவந்தார் திருநக்ஷத்ரம் – மாலை – பெருமாள், ஆளவந்தார் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ R. பத்ரி நாராயணன் |
| 3.8.20 | 19 | பௌர்ணமி | திங்கள் | உத்தராடம் / திருவோணம் | கஜேந்திர மோக்ஷம் | ஸ்ரீ M.K.R. குடும்பத்தினர், ஸ்ரீ ரமேஷ் |
| 4.8.20 | 20 | ப்ரதமை | செவ்வாய் | திருவோணம் | காலைஸ்வாமி தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N. சேஷாத்ரி |
| 5.8.20 | 21 | த்விதீயை | புதன் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 6.8.20 | 22 | த்ருதீயை | வியாழன் | சதயம் | பேயாழ்வார் | |
| 7.8.20 | 23 | சதுர்த்தி | வெள்ளி | பூரட்டாதி | தாயார் | ஸ்ரீ T.R. ஸ்ரீநிவாஸன் C/o. ஸ்ரீ S. ஸ்ரீதர் |
| 8.8.20 | 24 | பஞ்சமி | சனி | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 9.8.20 | 25 | ஷஷ்டி | ஞாயிறு | ரேவதி | திருமால்வடை | |
| 10.8.20 | 26 | ஸப்தமி | திங்கள் | அச்வினி / பரணி | திருமால்வடை | |
| 11.8.20 | 27 | அஷ்டமி | செவ்வாய் | பரணி | திருமால்வடை | |
| 12.8.20 | 28 | அஷ்டமி | புதன் | கார்த்திகை | கலியன் | |
| 13.8.20 | 29 | நவமி | வியாழன் | ரோஹிணி | திருப்பாணாழ்வார் | |
| 14.8.20 | 30 | தசமி | வெள்ளி | ம்ருகசீர்ஷம் | தாயார் | ஸ்ரீ V. ராஜகோபாலன் |
| 15.8.20 | 31 | ஏகாதசி | சனி | திருவாதிரை | பெருமாள் | |
| 16.8.20 | 32 | த்வாதசி | ஞாயிறு | புநர்வஸு | திருமால்வடை | |
| **குறிப்பு:** உத்ஸவங்கள் மாறுதலுக்கு உட்பட்டவை | | | | | | |

**Sponsorships and donations towards publication expenses are welcome**

# 11. Kamasika Ashtakam

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

This is a hymn on Lord Kamasika Nrusimha, whose shrine Thiru Velukkai is situated on the southern banks of the river Vegavathi, near the Hasthigiri. 'Kama' means 'own free will - Sankalpa' and 'Asika' refers to 'one's sitting posture'.

The Tamil equivalent 'Velirukkai' (வேளிருக்கை) is an amalgam of 'Vel' (வேள்) and 'Irukkai' (இருக்கை), with the former meaning 'desire' and the latter 'the state of being seated'. The term 'Velirukkai' is said to have corrupted into 'Velukkai' (வேளுக்கை).

Swami Desika commences the hymn Sri Kamasika Ashtakam stylistically, juxtaposing the words 'Uththaram' (உத்தரம்) and 'Dakshinam' (தக்ஷிணம்), which mean the north (also top) and south, respectively. He describes the Lord as one who, of His own desire, resides at the top of the Vedas as well as to the south of Vegavathi. Further more, he sings 'Glory be – Pallaandu' to the Lord, saying that the wonderful deity, who has the lion face, ever be victorious and unsurpassed.



In the second verse, he notes that the Lord Kamasika Nrusimha – who is the essence of the Thaapaneeya Upanishad – has the Sun, Moon and Agni as His three eyes, with the third on His forehead. He prays that the Lord, with those three eyes, should remove our three-fold afflictions called the Thaapa-thraya. They are:

- Aadhi Aathmikam – the ailments that are associated with the body and the mind (such as headache, cold, anger, fear, etc.);
- Aadhi Bhoudhikam – the ones that are caused by other beings (such as animals, birds, men, etc.); and
- Aadhi Dhaivikam – the ones that are caused by divine/natural elements (such as fire, water, heat, wind, cold, etc.).

In the next sloka, our Acharya pays homage to the Lord here, who has His body up to the neck in His innate form and the head as that of a lion. Out of His liking for these parts near the Vegavathi, it would seem that He has forsaken the comfort of Sri Vaikunta, he wonders.

"I worship the three-eyed Lord, who, out of sport, took the form of Nrusimha on the sand dunes of the river Vegavathi and also assumed a



**The Lord of Thiru Velukkai**

sitting posture with His legs crossed (Paryankaasanam). He alone is a relative to all living beings in the world," submits Sri Desika in Sloka No. 4.

The master poet in Swami Desika makes his presence strongly felt in his description of the Nrusimha Avathara (verses 6 & 7). He picks the majestically alluring 'Pruthvee' scale (a type of meter used in Sanskrit verses) ) for matching impetus to the narration. Sublimeness reaches its summit as the author brings forth Nrusimha's contrasting dual disposition – deceit on the one hand (Kapata Kesaree) while dealing with Hiranya and compassion on the other (Krupaa Kesaree) while blessing his son Prahlada. Kesaree, as many would know, means lion -- referring to Nrusimha here. The underlying observation is that while His face looks vicious for the wicked enemies, His eyes always shower the nectar of grace on His devotees.

In a defining penultimate verse, Swami Desika asserts in no uncertain terms the Lord's stature of being the sole saviour of one and all. He says, "if You are out to protect someone, where is the need for other protectors? Similarly, if You are not going to protect, what is the use of other (supposed) protectors? With this determination, I surrender to You, Nrusimha, the resident of the banks of the Vegavathi."

The hymn concludes with the customary Phala Sruthi in the ninth and final verse. The author says that one who recites this Sthothra with faith and devotion even once, will get rid of all the mighty sins and get hold of all the desired things in life, with the blessings of Kamasika Narahari.

*To be continued...* ✻

---

**ஸ்ரீ தேசிக மொழி**

பெரிய பிராட்டி தத்வங்களைப்பற்றிய ஜ்ஞானமாகிய திருமுலைப்பாலைக் கொடுத்துத் தன் குழந்தைகளான சேதனர்களை நல்வழிப் படுத்தி உலகுக்கே தாயாய்த் திகழ்கின்றாள். இவளது தன்மையைச் சிந்திக்கும் போது திருவேங்கடவனின் கருணையே இப்பிராட்டியின் சிறந்த வடிவு கொண்டதோ என்று கருத இடமாகின்றது. இத்தகைய பிராட்டியை வணங்குகின்றேன்.

**ஸ்ரீ தயா சதகம் – 6**

ஸ்ரீ:



*With Best Compliments from:*

**S. Narasimhan & Family,**
56, Alamelumangapuram,
Mylapore, Chennai 600 004.

&

**N. Seshadri & Family,**
'Lakshmi', Justice Sundaram Road,
Mylapore, Chennai 600 004.

**SVDD thanks Sri S. Narasimhan & Family and N. Seshadri & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam

கண்ணுக்கினியன



கோடை உத்ஸவம் - 1





## கோடை உத்ஸவம் - 2





கோடை உத்ஸவம் - 3





கோடை உத்ஸவம் - 4





கோடை உத்ஸவம் - 5






கோடை உத்ஸவம் - 6





கோடை உத்ஸவம் - 7



ஸ்ரீ:

# கோதையின் மேகதூதம்

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

*அல்லிநாள் தாமரை மேல் ஆரணங்கினின் துணைவி ★*
*மல்லி நாடாண்ட மடமயில் – மெல்லியலாள் ★*
*ஆயர்குல வேந்தன் ஆகத்தாள் ★*
*தென்புதுவை வேயர் பயந்த விளக்கு.*

நாச்சியார் திருமொழி தனியன் –
திருகண்ணமங்கையாண்டான்

*ஆர்த்ராபராதிநி ஜநேப்யபிரக்ஷணார்த்தம் |*
*ரங்கேச்வரஸ்ய ரமயா விநிவேத்யமாநே ||*

*பார்ச்வே பரத்ர பவதீ யதி தத்ர நாஸீத் |*
*ப்ராயேண தேவி வதநம் பரிவர்த்திடம் ஸ்யாத் ||*

ஸ்ரீ கோதாஸ்துதி – 24

**நாச்சியார் திருமொழி** என்பது முதலாயிரத்தில் மூன்றாவதும், ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த இரு ப்ரபந்தங்களில் இரண்டாவதும் ஆகும்.

திருமொழி என்பது – இன்னார் இயற்றியது, இன்ன பலனைத் தருவது என்றவற்றை வெளியிடும் பாசுரத் தோடு சேர்ந்து, பாசுரங்கள் பத்துக்குக் குறைவில்லாத



பாகமாகும். திருப்பாவையில் பத்துப் பாசுரங்கள் தோறும் இத்தகைய பிரிவில்லாமல் ''முப்பதும் தப்பாமே'' என்றபடி ஒன்றாக அமைந்திருப்பதால், அது திருமொழி என வழங்கப்படவில்லை.

மேலும் பெரியாழ்வார் திருமொழி, பெரிய திருமொழி போன்ற பல திருமொழிகளிருப்பதால், அவை களினின்றும் வேறுபாடு தோற்றவும், பாடவல்ல நாச்சியாரான ஸ்ரீ ஆண்டாள் திருவாக்கினின்று இவை வெளிவந்தபடியாலும், இஃது **நாச்சியார் திருமொழி** என வழங்கப்படுகிறது. திருப்பாவை எனப்படும் ப்ரபந்தங்கள் பல இல்லை ஆகையாலே, அங்கே நாச்சியார் எனப்படும் சொல் சேர்க்கப்படவில்லை.

தவிரவும், திவ்யப்ரபந்தங்களுக்குப் பெரும்பாலும் ஸ்ரீமந் நாதமுனிகள் காலத்தில் ஏற்பட்ட திருநாமங்களே வழங்கப்பெறுகின்றன என்றும், ப்ரபந்தம் அருளினவர் வைத்த பெயர் இவை இருக்கமாட்டா என்றும் ஆராய்ச்சியாளரகள் கூறுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இதன்படி, இந்த நாச்சியார் திருமொழியில், ஸ்ரீ ஆண்டாள் ஹேமந்த, சிசிர ருதுக்களில் முன்பு நோன்பு நோற்று, வஸந்த ருதுவில் எம்பெருமானைத் தன்னிடத்தில் வரவேண்டிக் குயிலை ஏவி, க்ரீஷ்ம ருதுவின் இடைக்காலத்திற்கு முன்னமே கனவில் கண்ணபிரானுக்கு மனைவியாகி, பிறகு அவன் வாயமுதம்முண்டு அநுபவிக்கக் காதல் கொண்டு அவன் சேர்க்கையை நினைத்துப் பேசி நின்றாள்.

இவ்வாறு இருக்கையில், மாரிக்காலமும் உடனே வந்தபடியால், வானத்தில் மேகங்கள் எங்கும் நிறைந்தேறி நின்றதைக் கண்ட ஸ்ரீ ஆண்டாள், **திருவேங்கடத்து எம்பெருமானே** மேகங்களாக எழுந்தருளியிருப்பானென நினைத்தாள். ஒருவேளை அவன் வராமலிருந்தால், தன்னை நலியும் அந்த மேகங்களையே தூதாக அனுப்பி அவனைத் தன்னிடத் தில் வருவிக்கலாமோ எனவும் எண்ணினாள். அதன் மேல் பிறந்த பாசுரங்களே, தற்பொழுது நாம் அநுபவிக்க இருக்கும் **கோதையின் மேகதூதம்** என்னும் இந்த கட்டுரையாம்.

*விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்*
*தெண்ணீர்பாய் வேங்கடத்தென் திருமாலும் போந்தானே*
*கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச் சோர்வேனை*
*பெண்ணீர்மையீடழிக்கும் இதுதமக்கோர் பெருமையே? [1]*

ஆகாயத்தில் நீலநிற விதானம் விரித்தால் போல விளங்கும் மேகங்களே, தெளிந்த நீரருவி கொட்டும் திருவேங்கடமலைத் திருமால் உங்களுடன்

வந்தானோ? பிரிவுத்துயரால் வருந்தி அழுகிற தன்னுடைய பெண்மையின் உயர்வை அழிக்கின்ற இச்செயல் 'அப்பெருமானுக்குப் பெருமை தரக்கூடிய ஒன்றா' என்கிறாள்.

இவள் முலைக்குவட்டில் கண்ணீர் சொரிவது, திருவேங்கடத்தில் தெண்ணீர் பாய்வது போலாயிற்று. ஆனால் அது குளிரருவியாயிருக்கும். இது வெந்நீர் வார்ப்பது போலிருந்ததாம். அதனால் மிகவும் சோர்ந்தாள்.

திருவேங்கடமலையில் தண்ணீர் பாய்வது பெருமை யாம். கலிக்ஷோபோந்மீலத்ம நிர்ச்சர கணா: என்னும் தயாசதக ச்லோகப்படிக்கு எல்லாம் தயாப்ரவாஹமாம். அத்தெண்ணீர் போல, தானும் அவனுடன் கலந்து, கண்ணீரின்றிக் குளிர்ந்து தெளிந்த ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாலன்றோ தமக்குப் பெருமை என்கிறாள் இப்பாசுரத்தில்.

*மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள் வேங்கடத்துச்*
*சாமத்தின் நிறங்கொண்ட தாடாளன் வார்த்தையென்னே*
*காமத்தீயுள்புகுந்து கதுவப்பட்டு இடைக்கங்குல்*
*ஏமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய் நானிருப்பேனே.* [2]

பிறகு, திருவேங்கடவன் வரவில்லையென்று தெளிந்து, அவன் எதாவது சொல்லியாவது அனுப்பியிருப்பானோ என்று நினைத்து, உயர்ந்த முத்துக்களையும், பொன்னையும் சொரிகின்ற மேகங்களே, நீலநிறமுடைய திருவேங்கடவன் என்னும் மேன்மையன், தனக்கு ஏதாவது செய்தி விடுத்திருக்கிறானா என்றும், விரகதாபமான தீ அவளுள் புகுந்து விட்டபடியால், இரவு நடுயாமத்தில் வீசும் தென்றல் காற்றின் கொடுமைக்கு இலக்காகி விட்டதாகவும், அதனால் நலிந்து தான் இங்கு இருப்பேனா என்றும் மேகங்களைப் பார்த்து கேட்கிறாள் ஸ்ரீ ஆண்டாள்.

*ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடிவையெல்லாம்*
*எளிமையால் இட்டென்னை ஈடழியப் போயினவால்*
*குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி*
*அளியத்த மேகங்காள் ஆவிகாத் திருப்பேனே.* [3]

இச்சமயத்தில் மேகங்கள் மெல்ல முழங்கவே, அவை தயை புரிந்து தனக்கு ஹிதோபதேசம் செய்வதாக நினைத்தாள். எனவே, தனக்கு அருள் புரியும் முகில்களைப் பார்த்து, அவ்வெம்பெருமான் தன்னை உபேக்ஷித்ததினால் உண்டான தீனதசை காரணமாக தன் ஒளி, நிறம், வளைகள், த்யான சக்தி, நித்திரை, இவை போன்றவை யாவும் தன்னுடைய பெருமையெல்லாம் அழியும்படி தள்ளிவிட்டுப் போய்விட்டதால் கஷ்டம். இப்படியான பிறகு, குளிர்ந்த நீரருவிகளையுடைய திருமலையில் எழுந்தருளியுள்ள கோவிந்தனான கண்ணனின் திருக்கல்யாணகுணங்களை, இசையுடன் கீர்த்தனம் செய்து கொண்டு, அதுவே தாரகமாகத் தனது ப்ராணனை பாதுகாத்துப் பிழைத்திருக்க முடியுமா என்கிறாள் ஸ்ரீ ஆண்டாள்.

*மின்னாகத்தெழுகின்ற மேகங்காள் வேங்கடத்துத்*
*தன்னாகத் திருமங்கை தங்கியசீர் மார்வற்கு*
*என்னாகத்திளங்கொங்கை விரும்பித்தாம் நாடோறும்*
*பொன்னாகம் புல்குதற்கென் புரிவுடைமை செப்புமினே.* [4]

தென்றல் பட்டு, வடதிசையை நோக்கிச் செல்லும் மேகங்களைப் பார்த்து, திருவேங்கடமுடையான் வார்த்தையைக் கொண்டு வந்த மேகங்களோ என்று தான் நினைத்ததாகவும், அது இல்லாது போனதால் தனது வார்த்தையையாவது ஆங்கவனுக்குக் கூறுவீர்களோ என்னும் பொருள்படும்படி, இந்த பாசுரத்தில் மின்னல் பொருந்திய ஆகாயத்தில் ஏறுகின்ற மேகங்களைப் பார்த்து, திருவேங்கடத்திலிருக்கும் தன்னுடைய உடலான பெரியபிராட்டி நித்யவாஸம் செய்யும், எல்லாக்குணங்களும் பெற்ற திருமார்பை யுடைய ஸ்ரீநிவாஸனுக்கு, அவனை விரும்பி, உடம்போடு மார்பு தழுவுவதற்கு ப்ரதி தினமும் தான் ஆசைப்பட்டிருப்பதை சொல்லுங்கோள் என்கிறாள் ஸ்ரீ கோதைப் பிராட்டி.

*வான்கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள் வேங்கடத்துத்*
*தேன்கொண்ட மலர்ச்சிதறத் திரண்டேறிப் பொழிவீர்காள்*
*ஊன்கொண்ட வள்ளுகிரால் இரணியனை உடலிடந்தான்*
*தான்கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே.* [5]

முதலில் போய்ப் பேசத் தொடங்கும் போதே, ''நாள்தோறும் பொன்னாகம் புல்கும்படி வந்திருக்க வேண்டுகிறாள்'' என்று சொல்லக்கூடுமோ என்று, அதனையும் ஒரு வகையில் கவனித்துச் சொல்லலாமென்று, திருவேங்கடமலையில் தேன் நிறைந்த புஷ்பங்கள் உதிர்ந்து விழும்படி, ஒன்றாகக்

## ஆடியில் முக்கிய உத்ஸவங்கள்

**திரு ஆடிப்பூர உத்ஸவம் (11 நாட்கள்)**
ஜூலை 15 (புதன்) முதல் 25 (சனி) வரை

**திருக்கல்யாண உத்ஸவம்**
ஜூலை 24 (வெள்ளி)

**ஊர்கோல உத்ஸவம்**
ஜூலை 25 (சனி)

**ஜ்யேஷ்டாபிஷேகம்**
ஜூலை 26 (ஞாயிறு)

**ஆளவந்தார் திருநக்ஷத்ரம்**
ஆகஸ்ட் 2 (ஞாயிறு)

**கஜேந்திர மோக்ஷம்**
ஆகஸ்ட் 3 (திங்கள்)

**குறிப்பு:** உத்ஸவங்கள் மாறுதலுக்கு உட்பட்டவை



கூடி மிகவாகப்பெய்கின்றவர்களாய் நடுவானத்தைப் பற்றிக் கிளம்பி மேற்சென்ற மேகங்களே, மாம்ஸப் பிடிப்பினால் உறுதியான சரீரத்தையுடைய ஹிரண்யாஸுரனை, கூர்மையான நகங்களாலே பிளந்த பரமன், தன் கையில் இராதபடிச் செய்த தன்னுடைய கைவளைகளை அவன் கொடுக்கும் நிலைமையிலிருந்தால், தன்னுடைய அவல நிலையை அவ்வெம்பெருமானிடம் எடுத்துக் கூறுங்கள் என்கிறாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி.

*சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள் மாவலியை*
*நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள்*
*உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப் புகுந்து என்னை*
*நலங்கொண்ட நாரணற்கென் நடலைநோய் செப்புமினே.* [6]

பொன்னாகம் புல்குதல் இல்லையென்றதால், இஷ்ட ப்ராப்தியில்லையே என்றது சொல்லியாயிற்று. மேலே அநிஷ்டங்கள் இருக்கின்றனவே என்று சொல்ல இயன்று, சரிவளைகள் போனதைப் பணித்தாள். அணிகள் அகன்றது கிடக்கட்டும், அவஸ்தைப் படுவது எப்போது ஒழியும் என்கிற கருத்தோடு, இந்த பாசுரத்தை அருளிச்செய்கிறாள் ஸ்ரீ கோதா நாச்சியார். இதன் படி, ஆழியுட்புக்கு ஜலம் முகந்து கொண்டு, வெளிக்கிளம்பி வானம் சென்ற மேகங்களைப் பார்த்து, மஹாபலியை முழு உலகுடன் தன் வசமாக்கிக்கொண்ட பிரான் எழுந்தருளியுள்ள திருமலையின் மீதேறிப் பரந்து மழை பொழிபவைகளே, உலங்கு என்னும் ஜாதி வகையைச் சேர்ந்த கொசுக்கள் புகுந்துண்ட விளாம்பழம் போல், உள்பாகம் க்ஷீணிக்கும்படி என்னுள் புகுந்து தன் நன்மைகளை அழித்த நாராயணனுக்கு தனது மனத்துயரம் மூலமான வியாதியைச் சொல்லுங்கோள் என்கிறாள் பாடவல்ல நாச்சியார்.

*சங்கமா கடல்கடைந்தான் தண்முகில்காள் வேங்கடத்துச்*
*செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம்*
*கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒருநாள்*
*தங்குமேல் என்னாவி தங்குமென்று உரையீரே.* [7]

ஏதி ஜீவந்தமாநந்தோ நரம் வர்ஷஸ்தாதபி என்றபடி, உயிரிருந்தால் வருஷம் நூறான பிறகாவது, ஆனந்தமென்பது வந்தே தீரும் என்று நம்பி நடலை நோயைப் பொறுப்போம் என்றால் முடியவில்லை. உயிர் நின்றால் தானே எப்போதாவது கோரினதைக் காண்பது. நாள்தோறும் புல்கினால்தான் ஆவி தங்குமோ என்று எண்ணவேண்டாம். ஒருநாளாவது தன்னுடைய கோருதலை நிறைவேற்றினாலும் போதும் என்று, இப்பாசுரத்தில், குளிர்ந்த மேகங்களைப் பார்த்து, பெரிய பாற்கடலைக் கடைந்தவனும், செந்தாமரைக் கண்ணனும், வ்யாமோஹமுள்ளவனுமான, திருமலையில் எழுந்தருளியிருக்கக்கூடிய விஷ்ணு வினிடத்தில், அவனுடைய செவ்விய திருவடிகளில் விழுந்திருப்பவளான தன்னிடம் வந்து, அரைத்துப் பூசின குங்குமப்பூவின் ரஸமெல்லாம் அவிந்து போகும்படி ஒருநாள் தங்கினால் கூட தனது ப்ராணன் அழியாமல் இருக்கும் என்றவாறு சொல்லுங்கள் என்கிறாள் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார்.

*கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள் வேங்கடத்துப்*
*போர்காலத்து எழுந்தருளிப் பொருதவனார் பேர்சொல்லி*
*நீர்காலத் தெருக்கில் அம் பழவிலைபோல் வீழ்வேனை*
*வார்காலத்து ஒருநாள் தம் வாசகம் தந்தருளாரே. [8]*

இப்படி ஒருநாள்கூட வரக்கூடாதபடி இருந்தாலும், அவர் ஒரு வார்த்தையாவது சொல்லி அனுப்பக் க்ருபை கூர்ந்தால் நலமாகயிருக்காதா என்கிறாள், இப்பாசுரத்தில். இதன்படி, திருமலையில் மழைக்காலத்தில் மேற்கிளம்பும் கரிய மேகங்களைப் பார்த்து, அடியார்களுக்காகப் போர் செய்து வெற்றி பெறும் பகவானின் திருநாமங்களை தாம் பலபடியாகச் சொல்லி, மழைக்காலத்தில் பழுத்து விழும் எருக்கஞ்செடியின் இலைபோலத் தளர்ந்து விழுவதாகவும், அப்படிப்பட்ட தனக்கு நெடுங்காலத்திலே என்றைக்காவது தமது வார்த்தையையாவது சொல்லியனுப்பி அருளமாட்டரா என்கிறாள் ஸ்ரீ ஆண்டாள்.

*மதயானை போலெழுந்த மாமுகில்காள் வேங்கடத்தைப்*
*பதியாக வாழ்வீர்காள் பாம்பணையான் வார்த்தையென்னே*
*கதியென்றும் தானாவான் கருதாது ஓர் பெண்கொடியை*
*வதைசெய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே. [9]*

வாசகம் தந்தருளாரே என்றபோது அவன் முன்சொன்ன வார்த்தை நினைவுற, அவன் பொய் சொல்லுகின்றானென்று அறிந்த பிறகு, அவன் வாசகத்தை எதற்கு நம்பவேண்டும். நம்ப முடியாதே. வாசகம் தராவிடில், துஷ்யந்தன் சகுந்தலையை முதலில் மறந்தாற்போலே மறந்துவிடானென்று, இவன் விஷயத்தில் சொல்லலுமாகாது என்று நினைத்து, திருவேங்கடமலையை இருப்பிடமாகப் பெற்று வாழ்கின்ற மதம்பிடித்த யானைகளைப் போல் கொடுமுடிக்குச் செல்லும் மேகங்களைப் பார்த்து, ஆதிசேஷனைப் படுக்கையாக உடையவனின் பேச்சானது என்ன இப்படி இருக்கின்றதே! எக்காலத்திலும் ரக்ஷகனாயிருக்குமவன், தன் போன்றவர்களை நினைகாமலேயிருந்து, ஒப்பற்ற கொடிபோன்ற பெண்ணை வதைத்தான் எனப்படும் சொல்லை இப்பூமியிலுள்ளவர் நம்பமாட்டர்களே! எனவே இத்தகைய அபகீர்த்தி அவனுக்கு வராதபடி பார்த்துக்கொள்ளட்டும் என்கிறாள் ஸ்ரீ கோதா நாச்சியார்.

*நாகத்தின் அணையானை நன்னுதலாள் நயந்துரைசெய்*
*மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்*
*போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதை தமிழ்*
*ஆகத்து வைத்துரைப்பார் அவரடியார் ஆகுவரே. [10]*

இறுதியாக, பக்தியில் தவறாத, புதுவைக்கோன் பெரியாழ்வாரின் மகளான, அழகிய முகமுடைய ஆண்டாளாகிய தாம், ஆதிசேஷனின் ஒரம்சத்தைப் படுக்கையாக உடைய பிரானாகிய திருவேங்கடவனை அடைய ஆசைப்பட்டு, மேகங்களைத் தூது அனுப்புவதாய் விஜ்ஞாபனமான இப்பாசுரங்களை மனத்தில் கொண்டு ஓதுபவர் திருமாலுக்கும், பாகவதர்களுக்கும் அடிமை செய்பவராவர் என்றருளி, தசகத்தைத் தலைக் கட்டுகிறார் ஸ்ரீ ஆண்டாள்.


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத் திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

# ஆழ்வார் செய்யும் விண்ணப்பம்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுள் தலைவரானவரும் ப்ரபந்நஜந கூடஸ்தருமான ஸ்வாமி நம்மாழ்வார் இப்புவியில் அவதரித்து குறையா மறையின் தெளியாத நிலங்களை அனைவரும் தெளியும்படி நான்கு வேதங்களின் ஸாரமாக நான்கு திவ்ய ப்ரபந்தங்களைத் தந்தருளினார். **பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்** என்ற மதுரகவியாழ்வார் திருவாக்குப்படி தம் அருளிச்செயல்கள் மூலம் தீர்ந்த அடியவர்களைத் திருத்தி எம்பெருமானிடத்தில் பணிகொள்ள வைப்பதையே ஆழ்வார் தன் திருவவதார வைபவத்தின் தலையாய கர்த்தவ்யமாகக் கொண்டார்.

ஸம்ஸார பந்தத்தில் கட்டுண்டு ஜீவன்கள் படும் அவஸ்தையானது ஆழ்வார் திருவுள்ளத்திற்கு எவ்வளவு அஸஹ்யமாய் இருக்கிறதென்பதை தன் முதல் ப்ரபந்தமான திருவிருத்தத்தின் முதல் பாசுரத்தின் மூலம் தமது ஞானக் கண்ணுக்கு இலக்கான எம்பெருமானிடம் ‘‘தேவரீரை அநுபவிக்கைக்கு விரோதியான தேஹஸம்பந்தத்தைப் போக்கியருள வேணும்’’ என்று எல்லா ஜீவன்களின் மீதும் தாம் கொண்ட மிகுந்த அநுதாபத்தினால் அவர்கள் சார்பாக விண்ணப்பஞ்செய்கிறார்.

*பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்*
*இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை - உயிர் அளிப்பான்*
*எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா*
*மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே!*



திருவிருத்தத்தின் இப்பாசுரத்திற்கு மட்டும் ஸ்வாமி தேசிகன் தமது உபகார ஸங்க்ரஹம் என்னும் க்ரந்தத்தின் நிர்ணய அதிகாரத்தில் மிகவும் விரிவாக வ்யாக்யானம் ஸாதித்து அருளியிருக்கிறார்.

**பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்:** பொய் நின்ற ஞானம் மற்றும் பொல்லாவொழுக்கு காரியங்கள். அழுக்குடம்பு காரணம். தத்வ ஜ்ஞானத்துக்கு விபரீதமாய் இருக்கக்கூடிய அனைத்து ஜ்ஞானமும் பொய் நின்ற ஜ்ஞானமாம். இதை ஸ்வாமி தேசிகன் **ஸம்ஸார மூலமான பிராந்திக் ஜ்ஞானமும் அதடியாக வந்த ப்ராதிகூல** அநுஷ்டானமும் **அதடியாக வந்த ரஜஸ்-தம: ப்ரசுரமான ப்ராக்ருத தேஹமும்** என்று விவரிக்கிறார். அதாவது:

- **பொய் நின்ற ஞானம் -** ஜீவாத்மா பலபல ஊழிகளாய் ஸம்ஸார பந்தத்தில் கட்டுண்டமையால் உண்டாகும் மோக்ஷத்திற்கு விரோதமான ஜ்ஞானம். ஸ்வாமி தேசிகன் திருவாக்குப்படி **அத்யந்த அல்பஸாரங்கள்,** அதாவது ப்ரயோஜனம் சிறிதும் இல்லாத மற்றும் வேண்டாத பலனையும் கொடுக்கும் ஜ்ஞானம் (பாஹ்ய குத்ருஷ்டி சாஸ்த்ரங்கள் போன்று). இதையே திருவள்ளுவர் தமது மெய்யுணர்தல் அதிகாரத்தில் **பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் மருளானாம் மாணாப் பிறப்பு** (குறள்: 351) என்று பொருளல்லாதவற்றைப் பொருளாகக் கொள்கின்ற மயக்கத்தினால் துன்பப் பிறவி உண்டாகும் என்று தலைக்கட்டுகிறார்.
- **பொல்லா ஒழுக்கு -** மேலே கூறிய விபரீத ஜ்ஞானத்தின் விளைவாக அஹங்கார மமகாரங்கள் கொண்டு செய்யப்படும் கர்மங்களும்
- **அழுக்குடம்பு -** ரஜஸ் மற்றும் தாமஸ குணங்கள் நிறைந்த, ஸத்வ குணம் சிறிதேனும் இல்லாத அசுத்தங்களோடு கூடின சரீரம்.

**இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை:** இது போன்ற ப்ரகாரத்தை அநுபவிக்காமல் பிறப்பு நீங்கி மோக்ஷம் பெறும்படியாக என்றவாறு. இவ்விடத்தில் ‘‘யாம்’’ என்று பன்மையாகவும் பாசுரத்தின் முடிவில் ‘‘அடியேன்’’ என்று ஒருமையாகவும் ப்ரயோகித்திருப்பது ஆழ்வார் எல்லா ஜீவன்களுக்கும் ப்ரதி நிதியாய் எம்பெருமானிடம் விண்ணப்பம் செய்கிறார் என்பதனாலே.

**சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்** (திருவாய்மொழி 9-10-5) என்ற ஆழ்வாரின் திருவாய்மொழி பாசுரப்படி ஸ்வாமி தேசிகன் தமது வ்யாக்யானத்தில் **ஸர்வலோக சரண்யனாய் சரணாகத வத் ஸலனான உன் திறத்தில் பிரதிபுத்தரான நாங்கள் இதற்குமேல் இந்த ப்ரதிகூல பரம்பரைகளை** இனிமேலும் அடையமாட்டோம் என்று ஸ்தாபிக்கிறார். இதற்கு பகவானின் கீதை வாக்யமான

*பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் |*
*தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||*

(ஸ்ரீமத் பகவத் கீதை 4-8) என்பதனைக் கொண்டு நிர்ணயம் பண்ணுகிறார்.

**உயிரளிப்பான்:** மோக்ஷத்திற்கு முக்கியத் தடையாய் இருப்பது ப்ரக்ருதி ஸம்பந்தம் என்று மேலே சொல்லிற்று. பின் உயிரளித்து மீண்டும் தேஹ ஸம்பந்தத்தை உண்டாக்குவது எப்படி உய்விப்பதாகும்? இதற்கு ஸ்வாமி தேசிகன் மிக

ஆச்சர்யமாக பொருள் ஸாதிக்கிறார். **தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:** (ஸ்ரீ மந்த்ர ராஜபத ஸ்தோத்ரம்) என்றபடி உலகில் உள்ள அனைத்து ஜீவன்களும் எம்பெருமானுடைய தாஸர்கள். மற்றும் **ஈசன் அடங்கெழில் அஃதென்று அடங்குக உள்ளே** (திருவாய்மொழி 1-2-7) என்று அவனிடத்தில் அடங்கியிருப்பதே உண்மையான ஆத்ம ஜ்ஞானம். பல யுகங்களாக ஜீவன் ஸம்ஸார பந்தத்தில் மூழ்கி தன்னுடைய உண்மை ஸ்வரூபத்தை மறந்து பின் தான் முற்பிறவியில் செய்த ஏதோ ஒரு நற்கர்மத்தினால் ஒரு ஆசார்யனுடைய ஸம்பந்தம் ஏற்பட்டு, தான் அவனடிக்கீழ் தாஸன் என்றும் பகவத் கைங்கர்யமே உன்னதமான தர்மம் என்றும் உணர்ந்து அவ்வாசார்யனின் கருணையால் எம்பெருமானிடத்தில் சரணாகதி பண்ணி மோக்ஷமடைகிறான். இவ்வாறு அஸத்கல்பமாய்க் கிடந்த ஜீவனின் குறைகளுக்கு **அவிஜ்ஞாதா**வாய் இருந்து அவன் செய்யும் குற்றங்களைப் பொருட்படுத்தாது எம்பெருமான் அந்த ஜீவனைக் கரைசேர்த்து உயர்ந்த மோக்ஷ பதவியைக் கொடுக்கிறான். இதுவே ஒரு ஜீவனுக்கு உயிரளிப்பதாகும் என்றும் அதுவரை அந்த ஜீவனானது ஒரு ஜடப்பொருள் போன்றதே என்றும் ஸ்வாமி தலைகட்டுகிறார்.

**எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்:** ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் கூறப்பட்ட எம்பெருமானின் திருநாமங்களில் ஒன்று விச்வயோநி: அதாவது அந்தந்த பிறப்பில் பிறந்த போது சிறிதும் வேறுபாடின்றி அதனதன் தன்மையாகவே எம்பெருமான் இருந்தமையை முன்னிட்டு ஆழ்வார் இங்கு என்நின்ற யோனி என்று வெளியிடுகிறார். **மீனோடு ஆமை கேழல் அரி குறளாய்...** (பெரிய திருமொழி 8-8-10) என்றபடி பலவித வடிவங்களில் எம்பெருமான் அவதரித்தமையையும் தேவ, மனுஷ்ய, ஸ்தாவர மற்றும் திர்யக் என்கிற நான்கு விதமான சரீரங்களிலும் **அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:** (நாராயண ஸூக்தம்) என்றபடி உள்ளும் புறமுமாக வ்யாபித்திருப்பதையும் சொல்லிற்று.

ஜீவன்கள் பிறப்பதற்கு காரணம் கர்மஸம்பந்தம். எம்பெருமானுடையது ஸங்கல்ப மாத்ரத்தால் உண்டானது. அதற்கான காரணங்களாக அவனே கூறுவது:

1. சிஷ்ட பரிபாலனம் - அடியார்களை ரக்ஷித்தல்

2. துஷ்ட நிக்ரஹம் - துஷ்டர்களைத் தொலைத்தல்

3. தர்ம ஸ்தாபநம் (தர்மத்தை நிலைநாட்டுதல்)

இதில் முதலில் கூறிய காரணமே அவனுக்கு மிக முக்கியமானது. ஏனென்றால் சிஷ்ட பரிபாலனத்திலே மற்ற இரண்டும் அடங்கிவிடுமன்றோ.

ஸர்வஜ்ஞான எம்பெருமான் இவையனைத்தையும் ஸங்கல்பமாத்ரத்தாலேயே நிறைவேற்ற முடியுமே. எதற்காக வந்து பிறக்க வேண்டும்? அவனைக் காணாமல் **காண வாராய் என்று கண்ணும் வாயும் துவர்ந்து** (திருவாய்மொழி 8-5-2) இருக்கும் அடியவர்களுக்காகவே. எம்பெருமானின் விபவ மற்றும் அர்ச்சாவதாரங்கள் இல்லையென்றால் ஆழ்வார்கள் அவனது பெருமைகளைக் கண்டு களித்து பக்தியில் திளைத்து திவ்ய ப்ரபந்தங்களை அருளியிருப்பரோ?

**இமையோர் தலைவா:** அயர்வறும் அமரர்கள் அதிபதி என்றவாறு. **நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணும்படி சர்வசமனான சர்வ ஸ்வாமியானவன்.** இமையோர் என்பது ஸ்ரீவைகுந்தத்தில் நித்யவாஸம் செய்து எம்பெருமானை க்ஷணக்காலமும் பிரியாதிருந்து எந்நேரமும் அவனை அநுபவிக்கும் நித்ய முக்தர்களைக் காட்டும்.

**மெய் நின்று கேட்டருளாய்:** ஆழ்வாருக்கு எம்பெருமான் நேரில் வந்து திருமேனியைக்காட்டிக் கேட்க வேண்டும். யானையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்றது போலில்லாமல், அடியவர்களின் குறை தீர்க்க அங்கும் இங்கும் பதறி ஓடிப்போகாமல் நின்று நிதானமாக நிலைத்து ஆழ்வாரின் விண்ணப்பத்தைக் கேட்க வேண்டும்.

ஏன் நேரில் வர வேண்டும்? திருப்பாற்கடலில் இருந்து கொண்டே கேட்கலாமே என்று தோன்றும். இதற்கு ஸ்வாமி தேசிகன் தமது உரையில் **இப்படி ரக்ஷயோக்கியனான என்னுடைய படிகளும் ரக்ஷனோன்முகனான உன்னுடைய படிகளும் பிரமான சித்தங்களன்றோ** என்று மிக அழகாக வெளியிடுகிறார். அதாவது ***ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ் மீதிச யாசதே*** (வால்மீகி இராமாயணம் - யுத்த காண்டம் -18-33) என்றபடி தன்னைச் சரணடையும் அடியவர்களைக் காத்தே தீருவேன் என்று எம்பெருமான் இராமாவதாரத்தில் ஸத்யம் செய்தான். அவன் காத்தே தீருவான் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஆழ்வாருக்கோ எம்பெருமான் நேரில் வர வேண்டும், வந்து அவனைப் பிரிந்து இருக்கும் இருப்பானது, ஆழ்வாருக்கு எவ்வளவு அஸஹ்யமாய் இருக்கிறதென்பதை அவன் நேரில் கண்டு அவர் செய்யும் விண்ணப்பத்தைக் கேட்டருள வேணும்.

**அடியேன் செய்யும் விண்ணப்பமே:** கேட்கையாகிற அருளைச் செய்யவேண்டுமென்று வேண்டுதல். தான் செய்யும் விண்ணப்பத்தை எம்பெருமான் கேட்டு கோரிக்கையைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று வேண்டவில்லை. விண்ணப்பத்தை செவிசாய்த்து கேட்பதையே வேண்டுகிறார். எம்பெருமான் திருவுள்ளத்தில் பட்டாலே போதுமானது. கார்ய ஸித்தி தன்னாலேயே ஆகும் என்பது கருத்து.

இப்பாசுரத்தைக் கொண்டு நாமும் எம்பெருமானிடம் இந்நின்ற நீர்மையை இனி ஒரு நாளும் இல்லாதவாறு பண்ண வேண்டுமென்று அவன் திருத்தாள்களில் சரணடைவோம். **ஆறெனக்கு, நின் பாதமே சரண்** என்று அவன்திருவடியில் அடங்கியிருப்போமாக!

ஸ்ரீ:

சிறுவர்க்காக

# ஸ்ரீநிவாஸனின் கருணை

1

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**ஸுமதி:** *''ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: ஸ்ரீநிவாஸாநுகம்பயா*
*இக்ஷுஸார ஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா சர்க்கராயிதம்''* .....
*ஸ்ரீநிவாஸாநுகம்பயா* ..... *இக்ஷுஸார ஸ்ரவந்த்யேவ* ....
*ஸ்ரீநிவாஸாநுகம்பயா* ..... *ஸ்ரீ-நி-வா-ஸா-நு-க-ம்-ப-யா* .....

**ஸுந்தரராஜன்:** என்னம்மா ஸுமதி! கீறல் விழுந்த 'க்ராமபோன் ப்ளேட்' மாதிரி ''ஸ்ரீ-நி-வா-ஸா-நு-க-ம்-ப-யா..... ஸ்ரீ-நி-வா-ஸா- நு-க-ம்-ப-யா''.....ன்னு, இதையே திரும்பத் திரும்ப மெதுவா சொல்லிண்ட்ருக்கயே; என்ன! பாட்டி சொல்லிக் குடுத்த 'அர்த்தாநுஸந்தானமா'?

**ஸுமதி :** ஊம் ! ஒரு விதத்தில ஸரிதாண்ணா. ஆனா, என் யோசனை எல்லாம், 'பெருமாளோட கருணை, இப்படி கற்கண்டு ஆறா இருக்கச்சே, கொரோனா/ கோவிட்-19 எல்லாம் வந்து நம்மை இப்படி ஏன் படுத்தறது ?' அதுதான்.

**ஸுந்தரராஜன்:** ஆமாம்; ஒருத்தர மட்டுமில்ல; ஒட்டு மொத்தமா எல்லாரையும் கஷ்டப்படுத்தி – பெருமாளும் கஷ்டப்படறார் !

**ஸுமதி :** என்னண்ணா! ஸமாதாநம் ஏதாவது சொல்லுவே-ன்னு பாத்தா, நீயும் எனக்கு மேலே பல ஸந்தேஹத்த கௌப்பறயே !!

**[இவா பேசறத எல்லாம் பக்கத்திலே ஒக்காண்ட்ருந்த பாட்டி கேட்டுண்டு இருக்கா]**

**பங்கஜம் பாட்டி :** பசங்களா ! என்ன ஸீரியஸ்-ஸான டிஸ்கஷன் ?

**ஸுமதி :** ஆமாம் பாட்டி ! கரண்ட் டாபிக்-கோட பெருமாள் விஷயத்த கோத்து, ஒரு ஸந்தேஹம் ....

**பங்கஜம் பாட்டி :** ரெண்டு பேரும் பேசறத கேட்டேன்.

**ஸுமதி :** அப்படீன்னா, இந்த ஸந்தேஹத்துக்கெல்லாம் ஸமாதாநம் என்ன, பாட்டி !

**பங்கஜம் பாட்டி :** மொதல்ல இந்த ஸந்தேஹமெல்லாம், ஸமாதாநம் தெரிஞ்சுக்கணும்-ங்க்ற அடிப்படைல வந்ததா இருக்கணும்; பெருமாளோட தயை- ங்க்ற குணத்தயே ஸந்தேஹபடறதா அமையக் கூடாது – அதாவது, எப்படிப்பட்ட கஷ்ட நிலையிலும், *'ஒருவேளை அவனுக்கு தயை இல்லையோ என்னவோ !'* அப்படீ-ங்க்ற மாதிரி எண்ணமே நமக்கு ஒருபோதும் வரக்கூடாது. என்ன ஸரியா ?

ஏன் தெரியுமா ? தயை போன்ற இந்த கல்யாண குணங்களெல்லாம் பெருமாளுக்கு இயற்கையாவே அமைந்து இருப்பவையாம்; ஆக, ஒருபோதும் அவனை விட்டுப் பிரியாதவை.



**இருவரும்:** நீங்க சொல்லிக்குடுத்ததின் பலனாக எங்களுக்கு பெருமாளின் தயையில் ஸந்தேஹமே வருவதில்லை, பாட்டி !

**பங்கஜம் பாட்டி :** ரொம்ப ஸந்தோஷம்; *'அப்படியிருக்கச்சே, ஏன் கஷ்டம் கொடுக்கறார்'*–னு ஒரு சின்ன உறுத்தல் இருக்கலாம். அதுக்கு ஸமாதானம் –



பெருமாளுக்கு தயையோடு கூட, இவ்வுலகை ந்யாயப்படி நடத்தவேணும் எனும் கடமையும் உள்ளது; அதாவது, தவறு செய்தவர்களை தண்டிப்பது; ஒழுங்காக நடப்பவர்களை அநுக்ரஹிப்பது என்பதுதான் அது. நாமோ தவறு செய்யறோம் ; ஆகவே 'கோபம்'-ங்க்றத ஏறிட்டுக்கொண்டு, செய்த தவறுக்கு கஷ்டம் கொடுக்கிறான். இதனால, நாமதான் அவனை 'கோபமூட்றோம்'-னு தெரியறது.

**ஸுந்தரராஜன் :** குறுக்கே பேசறத்துக்கு மன்னிக்கணும் பாட்டீ ! காரணம் எதுவாக இருந்தாலும், 'கஷ்டப்படுத்தறது' என்பது ஒரு கெட்ட குணமில்லையா ? பெருமாளுக்குப்போய், அது இருக்கலாமா ?

**பங்கஜம் பாட்டி :** (சிரிச்சிண்டே) பெருமாள் விஷயத்துல, அது கெட்ட குணமில்லை; ஏனென்றால் :

- அழியவேணும்-ங்க்ற நோக்கத்துடன் 'கஷ்டப்படுத்துவது'தான் தவறு. ஒரு வைத்யன் நோயை குணப்படுத்தணம்-னு கத்தியால அறுத்தால், அதைக் கெட்ட குணம்-னு சொல்றோமா !

- எம்பெருமான் செய்யும் 'தீமையும்' நன்மையில்தான் முடியும் – இதனை 'தீங்கு கழிப்பது' / 'நிக்ரஹமும் அநுக்ரஹ விசேஷமே' என்பர் பெரியோர். அப்பா, படிக்கச்சொல்லி மிரட்டினால், அப்போதைக்கு தீமையாகத் தோன்றும்; நன்கு படித்து உயர்ந்த நிலையை அடைஞ்சபோது, 'எங்கப்பா எவ்வளவு மிரட்டி படிக்கவைத்தார் தெரியுமா' என அநுக்ரஹமாக நினைப்பது இல்லையா! பெருமாள் இந்த கார்யத்த தன் தானைத் தலைவர் விஷ்வக் ஸேனர் வாயிலாகச் செய்கிறார் அப்படீங்க்றத 'அசேஷ விக்ந சமநம் அநீகேச்வரம் ஆச்ரயே ந ஶ்ரீமத: கருணாம்போதௌ சிக்ஷா ஸ்ரோத இவோத்திதம்'-னு தயாசதகம், 5–ம் ச்லோகத்துல சொல்லப்பட்டிருக்கே.

- சாஸ்த்ரப்படி, தவறு செய்தவன் தண்டனை அநுபவித்துவிட்டால், பாபத்திலிருந்து விடுபடுகிறான்; இல்லையேல் பாபம் நீங்காது (இது, வாலிக்கு ராமன் சொன்ன பதிலில் ஒன்றாம்)

- இந்த தண்டனை, அஞ்சும் ஒரு சிலரை ப்ராயச்சித்தம் பண்ண வைக்கும்; இன்னொரு தடவை தவறு செய்ய முயலும்போது எச்சரித்துத் தடுக்கும்.

இப்போ சொல்லு, பெருமாள் தண்டிக்கறது நல்லதா / இல்லையா ?

**ஸுமதி:** நல்லதுதான் பண்றார், பாட்டி! என் ஸந்தேஹம் தீர்ந்தது. அதுக்கு மேலே, அண்ணா கேட்டதுக்கு என்ன ஸமாதானம் – *ஒருத்தர் பண்ண தப்புக்குத் தக்க தண்டனை அவனுக்குத் தரது ஸரி. ஆனா 'கொரோனா' விஷயத்துல, corporal punishment மாதிரி ஒட்டுமொத்தமா-ன்னா தண்டிக்கிறார்? இன்னும் இதனால அவரும் அல்லவா கஷ்டப்படறார்?*

**பங்கஜம் பாட்டி:** இதுக்கு பதில் விவரமா சொல்லணும்; அதனால நாளைக்கு சொல்றேன், ஸரியா !

**இருவரும்:** ஸரி பாட்டீ!

(இருவரும் ஸேவித்துவிட்டு செல்கிறார்கள்)

**(தொடரும்)**

**ஸ்ரீ தேசிக மொழி**

நான் தொடங்கும் இந்நூல் (தயா சதகம்) தடையின்றித் தலைக்கட்டப் பெறுவதற்காக தூய்மையானவர்களான ஆசார்ய பரம்பரையை முதலில் தொழுகின்றேன். திருவேங்கடநாதனது கருணை பெரிய நீர்நிலையாகும் அதில் இறங்கும் துறைகளாக பல ஆசார்யர்கள் உளர். துறைகள் இல்லாவிடில் நீரில் இறங்கி நீராட இயலாது. அவ்வாறே ஆசார்யர்கள் இல்லாவிடில் எம்பெருமானது கருணையைக் கிட்ட முடியாது.

**ஸ்ரீ தயா சதகம் – 2**



நாதமுனிகள் திருநக்ஷத்ரம்



நாதமுனிகள் திருநக்ஷத்ரம்

